**உ**
**திருச்சிற்றம்பலம்**

# அருள்நூல்களில் ஆகமங்கள்

“சிவாகம பாஸ்கர”
**சிவஸ்ரீ க. கார்த்திகேய சிவம்**
சிவாகம ஆசார்யர்
ஸ்ரீஸ்கந்தகுரு வித்யாலயம்
திருப்பரங்குன்றம், மதுரை

**தண்ணிலவார் சடையார்தாம் தந்த ஆகமப்பொருளை**
**மண்ணின்மிசைத் திருமூலர் வாக்கினால் தமிழ்வகுப்பக்**
**கண்ணிய அத்திருவருளால் அவ்வுடலைக் கரப்பிக்க**
**எண்ணிறைந்த வுணர்வுடையார் ஈசர் அருளெனவுணர்ந்தார்**

- பா.எண் 23, திருமூலதேவநாயனார் புராணம், பெரியபுராணம்

பரமகருணாநிதியாகிய சிவபெருமானால் அருளிச்செய்யப்பட்ட முதனூல்கள் வேத-சிவாகமங்கள் என்பது நம் சமயக் கொள்கை. அப்பெருமான் அருள்பெற்ற ஸ்ரீமத் ஞானசம்பந்தப்பெருமான் முதலான அருளாளர்களால் அருளப்பெற்ற அருள்நூல்கள் பன்னிருதிருமுறைகள். இவையன்றி ஸ்ரீமத்-அருணகிரிநாதர், ஸ்ரீமத்-அபிராமிபட்டர், ஸ்ரீமத்-தாயுமானஸ்வாமிகள், ஸ்ரீமத்-குமரகுருபரஸ்வாமிகள், ஸ்ரீமத்-பாம்பன் ஸ்வாமிகள், ஸ்ரீமத்-வள்ளலார் ஆகியோர் பாடியருளிய நூல்களும் அருள்நூல்களே ஆகும்.

அவ்வருள்நூல்களில் [1]சிவாகமங்களைப் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றனவா?. அருளாளர்கள் ஆகமங்களைப் பற்றி என்ன கூறியிருக்கிறார்கள்? என்பவற்றைப் பார்க்கலாம்.

ஸ்ரீமத்ஞானசம்பந்தப் பெருமான், மூன்று இடங்களில் ஆகமம் என்ற பெயரை தமது திருப்பதிகங்களில் குறிப்பிடுகிறார்.

திருவிற்கோலம் என்ற திருத்தலத் திருப்பதிகத்தின் ஆறாவது பாடலில் வேதங்கள், வேதாங்கங்கள், ஆகமங்கள் ஆகியவற்றைச் சிவபெருமானே அருளிச் செய்தார் என்று குறிப்பிடுகிறார். அது

**“தொகுத்தவன் அருமறை அங்கம் ஆகமம் வகுத்தவன்”**

- பா.எ.6, ப.எ.23, திருவிற்கோலம், 3ஆம் திருமுறை

என்பதாகும்.

[1] இவ்வருள்நூல்களில் காணப்படும் வேதங்களைப் பற்றிய குறிப்புகளை முன்னரே பல அச்சுவேலி சிவஸ்ரீ குமாரசுவாமி குருக்கள் வேதாகமநிரூபணம் என்ற புத்தகத்தின் வாயிலாகவும், திருச்சிராப்பள்ளி திரு. மா சாம்பசிவம் பிள்ளை அவர்கள் திருநான்மறை விளக்க ஆராய்ச்சி என்ற புத்தகத்தின் வாயிலாகவும் எடுத்துக்காட்டி விளக்கியுள்ளனர்.

திருவொற்றியூர் திருத்தலத்தின் பத்தாவது பாடலில் சிவபெருமானை ஆகமங்களின் தலைவன் என்று கூறுகிறார்.

**“ஆகமச்செல்வனாரை”**

- பா.எ.10,ப.எ.57, திருவொற்றியூர், 3ஆம் திருமுறை

என்பதாகும்.

மூன்றாவதாக திருக்கோகரணத்தலத்தின் ஆறாவது பாடலில்,

**“ஆறுசம யங்களும் விரும்பியடிபேணியரன் ஆகம மிகக் கூறுமனம்**
**வேறிரதி வந்தடியர் கம்பம்வரு கோகரணமே”**

- பா.எ.6, ப.எண்.23, திருகோகரணம், 3ஆம் திருமுறை

என்று சிவபெருமான் வீற்றிருந்தருளும் இடமான திருக்கோகரணத் தலமானது சிவாகம விதிப்படி, இறைவனின் திருவடிகளை மனத்தில் சிவானந்தம் மேலிடவும், உடலில் நடுக்கம் வருகின்ற வகையிலும், விரும்பி வழிபடுகின்ற ஆறு சமயத்து அடியவர்களும், வாழ்கின்ற ஊராகும் என்றுக் குறிப்பிடுகிறார்.

வேதாகமங்களைப் பெருமான் முதலில் உமையம்மைக்கே உபதேசித்தார் என்றும், அவ்வுபதேசமும் [2]உலகத்தின் ஸ்ருஷ்டிக்கு முன்பே நிகழ்ந்தது என்றும், ஆகமங்கள் கூறுகின்றன. இக்கருத்தை ஸ்ரீமத்திருநாவுக்கரசர் பெருமான் திருவிடைமருதூர் திருத்தலத்தின் நான்காவது பாடலில் குறிப்பிடுகிறார். அப்பாடல்,

**துணையி லாமையில் தூங்கிருட் பேய்களோ**
**டணைய லாவ தெமக்கரி தேயனா**
**இணையி லாயிடை மாமரு தில்லெழு**
**பணையில் ஆகமஞ் சொல்லுந்தன் பாங்கிக்கே**

- பா.எ.4, பதி. எ.84 திருவிடைமருதூர்

என்பதாகும்.

ஸ்ரீமத் சுந்தரமூர்த்தி சுவாமிகள் காளையார்கோயில் என்று அழைக்கப்படும் திருக்கானப்பேர் திருத்தலத்தின் பாடலில்,

**“அண்டர் தமக்கு ஆகமநூல் மொழியும் ஆதீ”**

- பா.எ.8, பக்.எண்-84, திருக்கானப்பேர், 7ஆம் திருமுறை

என்று சிவபெருமானை விளிக்கிறார். இவ்விடத்தில் அண்டர் என்ற சொல் சிவபெருமானிடம் நேர்நின்றும், வழிநிலையில் நின்றும், ஆகம உபதேசம் பெற்றவர்களாகிய

---

[2] வேதாகமௌ மயா ப்ரோக்தௌ லோக ருஷ்டே: புரா சிவே |
அம்பிகையே வேதாகமங்கள் என்னால் உன் பொருட்டு உலகத்தின் படைப்புக்கு முன்னரே அருளப்பட்டன.
- பக். எண் 5. சைவாகமலேகஸர்வஸ்வம், இந்திய ஆய்வியல் நிறுவனம், 1995

சிவர்களையும், ருத்ரர்களையும், பிறதேவர்களையும் குறிக்கும் என்கின்றனர் [3]உரையாசிரியர்கள்.

அடுத்ததாக அவர் திருவாரூர் பரவையுன்மண்டளி என்ற தலத்தின் பதிகத்தில்,

**“அம்மானே ஆகமசீலர்க்கு அருள்நல்கும் பெம்மானே”**

- பாடல் எண், 6. திருவாரூர் பரவையுன்மண்டளி, 7ஆம் திருமுறை

ஆகமநெறியைப் பின்பற்றுபவர்களுக்கு அருள்செய்பவன் சிவபெருமான் என்று பாடுகிறார்.

மூன்றாவதாக திருநொடித்தான்மலை என்ற திருக்கயிலாயப் பதிகத்தில், தான் கயிலைக்குச் செல்லும்போது, அங்கு அவர் செவிகளில் விண்ணிலிருந்து ஹர ஹர என்ற ஒலி, ஆகமங்களை ஓதும் ஒலி, பக்தர்கள் பாடும் தோத்திர ஒலி, வேதஒலி ஆகியவை அவருக்கு எதிரொலியாகக் கேட்டன என்பதைப் பதிவுசெய்கிறார்.

**“அரவொலி ஆகமங்கள் அறிவாரறி தோத்திரங்கள்**
**விரவிய வேத ஒலி விண்ணெலாம் வந்தெதிர்ந்திசைப்ப”** -

- பா.எண்-8, திருநொடித்தான்மலை, 7ஆம் திருமுறை

என்பது அவர் திருவாக்கு.

பரமனருள் முழுதும் பெற்ற அடியார் பெருமக்களும், சமயக்குரவர்களாக விளங்குபவர்களுமாகிய மூவர் முதலிகள் என்று போற்றப்படுகின்ற மூவருமே, ஆகமங்களைப் பற்றிக்கூறியிருக்க, இக்காலத்தில் சிலர் இவ்வாகமங்களைப் ப்ரமாணமாக ஏற்றுக் கொள்ளாமல் இருக்கிறார்களே! இவர்களுக்கு நான் என்ன சொல்லமுடியும் என்று வினவும் வண்ணம் இரண்டு பாடல்களை தமது **திருப்பா** எனும் நூலில் பாடுகிறார் ஸ்ரீமத் பாம்பன் குமரகுருதாச ஸ்வாமிகள். **“தமது கண்ணும் கருத்தும் நுழையாத நூலில்லை”** என்று குறிப்பிடும் அவர், மூவர்முதலிகள் எந்தத் திருத்தலத்தின் எத்தனையாவது பாடலில் ஆகமம் என்று குறிப்பிட்டு இருக்கிறார்கள் என்பதையும் தமது பாடலில் கூறுகின்றார்கள்.

அவ்விரண்டு பாடல்கள்,

**“சீரிய திருவிற் கோலவம் பதிகத் தேயிரு மூன்றினும் ஒற்றி**
**ஊரினப் பதிகம் பத்திலும் பொழிலேர் ஓங்குகோ கரணவாறினுமா**
**ஆரியன் ஞானப் பாலறா வாயன் ஆகமச் சிறப்பெடுத் ததிர்த்த**
**காரியந் தேரா துளறுநர்க் கியாது கழறுவேன் என் குருமணியே”**

**“திருவிடை மருதூர்ப் பதிகம்நான் கதிலே தேசிக நாவரசுகளும்**
**மருவடர் கானப் பேர்திருவாரூர் மண்டளி கயிலைகட் குரிய**
**துரிசறு பதிகம் எட்டொரா றெட்டிற் சுந்தர ரும்பதி நூலைப்**
**பொருளுற விதந்து சொனதறியார்க்கென் புகலுவேன் என் குருமணியே”** -

- பக்கம் - 426, பா. எண். 3-4, குருமணி,
திருப்பா இரண்டாம் புத்தகம், மஹாதேஜோமண்டலத்தார். 2000

---

[3] பக்கம்:1154, திருக்கானப்பேர், சுந்தரர் தேவாரம், ஏழாம் திருமுறை, பொழிப்புரை விளக்கக் குறிப்புரைகளுடன், ஞானசம்பந்தம் பதிப்பகம், தருமை ஆதீனம். 1997.

எட்டாம் திருமுறையாகிய திருவாசகத்தில் மணிவாசகப்பெருமான் சிவபெருமானை,

**“ஆகமம் ஆகி நின்று அண்ணிப்பான் தாள் வாழ்க”**

ஆகமவடிவினனாக இருந்து இனிமை செய்யும் இறைவன் திருவடிகள் வாழ்க என்று போற்றுகிறார்.

அதென்ன ஆகமம் ஆகி நின்று அண்ணித்தல்; இறைவன் ஆகமங்களை அருளினார் சரி, அவரே ஆகமவடிவாகவும் இருக்கிறாரா? என்பதற்கு ஆம் என்று ஆகமநூல்களே விடையளிக்கின்றன. ஆகமங்கள் கூறும் சிவபெருமானின் ஆகமவடிவம்.

**காமிகம் பாதயுக்மம் ஸ்யாத் யோகஜம் குல்பமேவ ச |**
**சிந்த்யம் பாதாங்குளி: ப்ரோக்த: காரணம் ஜங்கிகா பவேத் ||**
**அஜிதம் ஜாநுதேசம் ஸ்யாத் தீப்தம் ஊருப்ரதேசகம் |**
**ஸூக்ஷ்மந்து குஹ்யமேவம் ஸ்யாத் ஸஹஸ்ரம் கடிதேசகம் ||**
**அம்சுமான் ஸ்யாத் ப்ருஷ்டதலம் ஸுப்ரபேதம் து நாபிகம் |**
**விஜயம் குக்ஷிதேசம் ஸ்யாத் நி:ச்வாஸம் ஹ்ருதயம் பவேத் ||**
**ஸ்வாயம்புவம் ஸ்தனௌ த்வௌ து அனலம் நேத்ரமேவ ச |**
**வீரம் கண்டப்ரதேசஸ்து ரௌரவம் ச்ரோத்ரமேவ ச ||**
**மகுடம் மாகுடம் தந்த்ரம் அங்கப்ரத்யங்கமேவ ச |**
**பாஹூ து விமலம் ப்ரோக்தம் சந்த்ரஜ்ஞானம் உரஸ்தலம் ||**
**பிம்பதந்த்ரம் ஸுவதனம் ப்ரோத்கீதம் ரஸனா பவேத் |**
**லலிதம் ஸ்யாத் கபோலம் து ஸித்தம் சைவ லலாடகம் ||**
**ஸந்தானம் குண்டலம் வித்யாத் சர்வோக்தமுபவீதகம் |**
**பாரமேசேன ஹாரம் து கிரணம் ரத்னபூஷணம் ||**
**வாதுலம் வஸனம் ப்ரோக்தம் சிவதர்ம த்ரிபுண்ட்ரகே |**
**கல்பஞ்சைவ து ஸம்யோகே சிவதர்மானுலேபனே ||**
**பிம்பம் புஷ்பே ச மால்யே ச ஸித்தாந்தேந நிவேதிதம் |**

பக்.எண் 4, ஸ்ரீமத் காமிகாகமம், பூர்வபாகம்.

காமிகம் திருவடிகள்; யோகஜம் கணுக்கால்கள்; சிந்த்யம் திருவடிகளிலுள்ள விரல்கள்; காரணம் கண்டைக்கால்கள்; அஜிதம் முழங்கால்கள்; தீப்தம் தொடைகள்; ஸூக்ஷ்மம் குஹ்யம்; ஸஹஸ்ரம் இடுப்பு; அம்சுமான் முதுகு; ஸுப்ரபேதம் நாபி; விஜயம் வயிறு; நிச்வாஸம் ஹ்ருதயம்; ஸ்வாயம்புவம் தனங்கள்; அனலம் கண்கள்; வீரம் கழுத்து; ரௌரவம் செவிகள்; மகுடம் கிரீடம்; விமலம் திருக்கரங்கள்; சந்த்ரஜ்ஞானம் மார்பு; பிம்பம் திருமுகம்; ப்ரோத்கீதம் நாக்கு; லலிதம் கன்னங்கள்; ஸித்தம் நெற்றி; ஸந்தானம் குண்டலங்கள்;

சார்வோக்தம் பூணூல்; பாரமேச்வரம் ஆரங்கள்; கிரணம் ரத்னாபரணங்கள்; வாதுளம் ஆடையும் பரிவட்டமுமாக விளங்குகின்றன.

இவையன்றி உள்ள உபாகமங்கள் பல விபூதிபட்டைகளும், சந்தனப்பூச்சும், பரிமளத்ரவ்யங்களும் மலர்களுமாக அமைந்துள்ளன. எல்லா ஆகமங்களிலுமுள்ள ஞானபாதமாகிய ஸித்தாந்தம் சிவபெருமானுக்கு நிவேதனமாக விளங்குகின்றது.

இக்கருத்தைத் தான் மணிவாசகப்பெருமான் ஆகமம் ஆகி நின்று என அருளியிருக்கிறார்.

இது மட்டுமல்ல சிவபெருமான் தனது ஈசானம் முதலான ஐம்முகங்களின் வாயிலாகவே ஆகமங்களை உபதேசம் செய்தார் என்ற செய்தியையும் அழகாகக் கூறுகிறார் மணிவாசகப்பெருமான்.

**“மற்றவை தம்மை மகேந்திரத்திருந்து**
**உற்ற ஐம்முகங்களால் பணித்து அருளியும்” -**

என்பது அவரது திருவாக்கு.

பத்தாம் திருமுறையாகப் போற்றப்படுகின்ற திருமந்திரம் ஆகமஸாரமே என்பதைச் சொல்லவும் வேண்டியதில்லை. அது உள்ளங்கை நெல்லிக்கனி. ஆனாலும் சிலவற்றைக் குறிப்பிடலாம். இந்நூலாசிரியர் ஆகமச்சிறப்பு என்ற பகுதியில் [4]ஆகமங்களின் எண்ணிக்கை, [5]உபதேசம் பெற்றவர்களின் எண்ணிகை, [6]முதலில் உபதேசம் பெற்றவர் யாவர்? [7]பெருமானின் எந்த முகத்திலிருந்து ஆகமங்கள் தோன்றின? [8]ஆகமங்களின் தோற்ற முறைமை என்ன? [9]ஆகமங்களை எப்படிப் பயிலவேண்டும்? [10]ஆகமங்களைப் பெருமான் அருளியதன் நோக்கம் என்ன? போன்ற பல விஷயங்களைக் குறிப்பிடுகிறார்.

---

[4] அஞ்சோடு இருபத்து மூன்றுள ஆகமம்

[5] அஞ்சலி கூப்பி அறுபத்து அறுவரும்

[6] மாரியும் கோடையும் வார்பனி தூங்கநின்
றேரியு நின்றங் கிளைக்கின்ற காலத்து
ஆரியமும் தமிழும் உடனே சொலிக்
காரிகையார்க்குக் கருணை செய்தானே

[7] அஞ்சாம் முகத்தில் அரும்பொருள் கேட்டதே

[8] சிவமாம் பரத்தினிற் சத்தி சதாசிவம்
உவமா மகேசர் உருத்திரதேவர்
தவமால் பிரமீசர்----------------------------

[9] அண்ணல் அறைந்த அறிவறியாவிடில்
எண்ணிலி கோடியும் நீர்மேல் எழுத்தே

[10] காலை எழுந்து கருத்தறிந்து ஓதிடில்
ஞானத் தலைவனை நண்ணுவரன்றே

ஆகமங்களின் எண்ணிக்கை இருபத்தெட்டு என்றுக் குறிப்பிட்ட ஆசிரியர், அவர் குருமரபில் பயிலப்பட்டுவந்த ஆகமங்களின் எண்ணிக்கை [11]9 என்றுக் குறிப்பிடுகிறார். இதன்மூலம் அக்காலத்தில் ஒவ்வொரு குருமரபினரும் சில ஆகமங்கள் முழுமையையும் உபதேசமாகப் பெற்றுப் படிக்கும் முறை இருந்துவந்துள்ளது என்பது விளங்குகிறது. இதே கருத்து சிவபூஜாஸ்தவம் என்ற நூலின் [12]உரையிலும் காணப்படுகிறது.

பதினொன்றாம் திருமுறையாசிரியர்களுள் ஒருவராகிய நம்பியாண்டார் நம்பிகள், ஆளுடையப்பிள்ளையார் திருக்கலம்பகத்தில், ஞானசம்பந்தப்பெருமான் தமது பதிகங்களில் வேதியர்கள் செய்யவேண்டிய கடமைகள், மேலான சிவாகமங்களில் கூறப்பட்டுள்ள செய்திகள், வேதவிதிகள் முழுவதையும் அருளியிருக்கிறார் என்றுக் குறிப்பிடுகிறார். இவ்விடத்தில் பரம என்ற அடைமொழியின் மூலமாக ஆகமங்களின் சிறப்பை நமக்கு விளங்கவைக்கிறார் நம்பிகள்.

**“பன்மறையோர் செய்தொழிலும் பரம சிவாகம விதியும்**
**நன்மறையின் விதிமுழுதும் ஒழிவின்றி நவின்றனையே”**

- பக். 1028, ஆளுடையப்பிள்ளையார் திருக்கலம்பகம், 11ஆம் திருமுறை,

என்பது அவரது வாக்கமுதம்.

பனிரெண்டாம் திருமுறையாகிய பெரியபுராணத்தில் ஆகமங்களின் அருமை பெருமைகளைப் பல இடங்களில் பதிவு செய்கிறார் சேக்கிழார் பெருமான்.

திருமலைச் சருக்கத்தில், திருநகரச் சிறப்புச் சொல்லும்போது, திருவாரூரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சிசெய்த மனுநீதிச்சோழ மன்னன் துங்க = உயர்ந்தபெருமையுடைய, ஆகமங்கள் சொன்ன முறையில் திருக்கோயில்களில் பூஜை முறைகள் வழுவாமல் நடைபெற வேண்டும் என்பதற்காகப் பல நிபந்தங்களை ஏற்படுத்தியிருக்கிறார் என்ற வரலாற்றைப் பதிவுசெய்கிறார்.

**பொங்குமாமறைப் புற்றிடங்கொண்டவர்**
**எங்குமாகி இருந்தவர் பூசனைக்கு**
**அங்கண் வேண்டுநிபந்தமாராய்ந்துளான்**
**துங்க ஆகமம் சொன்ன முறைமையால்**

- பாடல் எண். 16, பக். 1049, திருநகரச் சிறப்பு, பெரியபுராணம்

[11] பெற்றநல் ஆகமம் காரணம் காமிகம்
உற்றநல் வீரம் உயர்சிந்தம் வாதுளம்
மற்றவ்வியாமளமாகுங்கா லோத்தரம்
துற்றநற் சுப்பிரம் சொல்லும் மகுடமே

[12] இந்நூலின் ஆசிரியரும் கோளகீமடத்தில் வசிப்பவருமாகிய ஞானசிவாசார்யர் தனது குருமரபில் பயிலப்பட்டுவரும் வாதுளபேதமாகிய காலோத்தரம் முதலான ஆகமங்களை ஆராய்ந்து, 7000 சுலோகங்களினால் ஞானரத்னாவளி என்ற நூலை இயற்றியவர்.
பக். 1, சிவபூஜாஸ்தவம் உரையுடன், சிவாகம சித்தாந்த பரிபாலன சங்கம், தேவகோட்டை, கலி - 1935

இதுவன்றி, மெய்ப்பொருள் நாயனார் புராணம், கண்ணப்பநாயனர் புராணம், திருக்குறிப்புத்தொண்டர் புராணம், திருஞானசம்பந்தநாயனார் புராணம், திருமூலதேவ நாயனார் புராணம், சண்டேசுரநாயனார் புராணம், திருநீலநக்க நாயனார் புராணம் ஆகியவற்றில் ஆகமங்களைப் பற்றிப் பேசுகிறார் சேக்கிழார் பெருமான்.

அவற்றுள், திருக்குறிப்புத்தொண்டர் புராணத்தில் உமாதேவிப் பிராட்டியார் பெருமானிடத்தில் ஆகமங்கள் அனைத்தையும் கேட்டார் என்பதையும், ஆகமங்கள் எண்ணிறந்தன என்பதையும், பெருமானுக்கு ஆகமங்களின் வழிச் செய்யப்படுகின்ற பூசையிலேயே உண்மையான விருப்பம் எனப் பெருமானே அம்பிகைக்கு உபதேசித்ததையும், அதைக்கேட்ட அம்பிகைக்குப் பெருமான் அருளிய ஆகமநெறியின்படி பூசை செய்வதற்கு ஆசை பொங்குவதாகவும், பிறகு அரனுரைத்த ஆகமங்களில் பூசைக்கு அங்கமாகச் சொன்ன பொருட்களையெல்லம் சேர்த்து, அவ்வாகமங்களில் சொன்ன சிவபூசைமுறை முழுவதையும் செய்தாள் (நமக்குச் செய்து காட்டினாள்) என்று படம்பிடித்துக் காட்டுகிறார் சேக்கிழார் பெருமான்.

மனதினால் கோயில் சமைத்த பூசலார் நாயனாரின் அருள்வாழ்க்கையைச் சொல்லும் சேக்கிழார் பெருமான், அந்நாயனார் திருக்கோயில்கட்டுவதற்கான ஏற்பாடுகளைச் செய்து, கட்டுவதற்கு உகந்தநாளில் அன்போடு **ஆகமவிதிகளின்படி** அடிநிலை = ஆத்யேஷ்டிகா ஸ்தாபனம் தொடங்கி விமானஸ்தூபி ஸ்தாபனம், தாவர = சிவலிங்கப் ப்ரதிஷ்டை ஈறாக அனைத்துக் க்ரியைகளையும் மனதினாலேயே செய்து முடித்தார் என்று கூறுகிறார்.

**சாதனத்தோடு தச்சர் தம்மையும் மனத்தால் தேடி**
**நாதனுக்கு ஆலயம் செய் நலம்பெறு நன்னாள்கொண்டே**
**ஆதரித்து ஆகமத்தால் அடிநிலை பாரித்து அன்பால்**
**காதலில் கங்குல் போதும் கண்படாது எடுக்கலுற்றார்.**

- பா. எண். 6, பூசலார்நாயனார் புராணம்

என்னுடைய நாயகனுக்கு என்னுடைய மனத்தில் நான் கோயில் கட்டுகிறேன். அதை என் விருப்பப்படி நான் அமைத்துக்கொள்ளலாமே என்று நினைக்கவில்லை பூசலார்நாயனார். மாறாக, திருக்கோயில் கட்டுவதற்கான அனைத்துக் க்ரியைகளையும் ஆகமங்கள் சொன்ன முறையிலேயே செய்தார் என்றுக் குறிப்பிடுகிறார் சேக்கிழார்பெருமான். இதன் மூலம் சைவர்களாகிய நாம் ஆகமவிதிகளை மனதினால் கூட மீறக்கூடாது என்ற கருத்தை வலியுறுத்துகிறார் அப்பெருமான்.

இதேபோல சிவாகமங்களில் கூறப்பட்டுள்ள பல விஷயங்களை நாம் திருமுறைகளில் பரக்கக் காணமுடிகிறது. அவற்றுள் சிலவற்றைப் பார்ப்போம்.

சிவாகமங்களில் கூறப்பட்டுள்ள பரார்த்தபூஜா விதியில் மாஸபூஜாவிதி என்பதும் ஒன்றாகும். அம்-மாஸபூஜை ஒவ்வொரு மாதத்திலும் மாதப்பிறப்பு முதலான குறிப்பிட்ட சில நாட்களுள் ஒருநாளில் கீழ்காணும் பட்டியலில் உள்ளபடி செய்யப்படவேண்டும்.

| | |
|---|---|
| மார்கழியில் - நெய் | தையில் - தேன் |
| மாசியில் - நெய்க்கம்பளம் | பங்குனியில் - தயிர் |
| சித்திரையில் -மரிக்கொழுந்து | வைகாசியில் - சந்தனம் |
| ஆனியில் - பழபூஜை - பவித்ரஸமர்பணம் | ஆடியில் - பால் |
| ஆவணியில் - சர்க்கரை | புரட்டாசியில் - அப்பம் |
| ஐப்பசியில் - அன்னம் | கார்த்திகையில் - தீபம் |

கீழ்காணும் ச்லோகங்கள் ஸ்ரீமத்-அம்சுமான் எனும் ஆகமங்களில் காணப்படுவனவாகும்.

**மார்கசீர்ஷே க்ருதம் ப்ரோக்தம் புஷ்யே க்ஷௌத்ரம் ப்ரசஸ்யதே |**
**ஸ-க்ருதம்-கம்பளம் கும்பே தபஸ்யே ததிகீர்த்திதம் ||**
**மதுமாஸே தமனகம் மாதவே கந்தபூஜனம் |**
**பலபூஜா சுக்ரமாஸே க்ஷீரேணாஷாடபூஜனம் ||**
**நபோமாஸே சர்கரா ச நபஸ்யேபூபபூஜனம் |**
**அந்நபூஜா துலாமாஸே கார்த்திகே தீபபூஜனம் ||**

- பக். 83, மாஸபூஜாகால:, சைவகாலவிவேகம்.

இவற்றுள் புரட்டாசி தொடங்கி ஆனி வரையிலான பத்துமாதத் திருவிழாக்களைக் திருமயிலைத் தேவாரத்தில் குறிப்பிடுகிறார் ஞானஸம்பந்தப்பெருமான். பூம்பாவைப் பதிகம் என்பதும் அதற்குப் பெயர். அவற்றுள் கார்த்திகை விளக்கீடு, மார்கழித் திருவாதிரை, நெய்ப்பூசும் தைப்பூசம் ஆகியவற்றை நாம் அவதானிக்க முடிகிறது. அதேபோல ஆனிமாத நினைவைக் குறிப்பிடும்போது,

**“பெருஞ்சாந்தி காணாதே போதியோ பூம்பாவாய்”**

பா.எ. 10, ப.எண். 17, திருமயிலாப்பூர், 2ஆம் திருமுறை

என்று குறிப்பிடுகிறார். இப்பெருஞ்சாந்தி என்பது மஹாப்ராயச்சித்தம் என்று சொல்லப்படுகின்ற பவித்ரோத்ஸவம் ஆகும். பவித்ரோத்ஸ்வத்திற்கான உத்தம-மத்யம-அதம மாஸங்களைக் குறிப்பிடும்போது,

**“ஆஷாடாதி த்ரயோ மாஸா: ஜ்யேஷ்ட-மத்யம-கந்யஸா: |”**

பக்.48, பவித்ராரோஹணவிதி, உத்தரகாமிகாகமம்.

என்கிறது ஸ்ரீமத்காமிகாகமம். இப்பதிகம் முழுவதையும் ஆகமங்களின் பிண்ணனியில் நோக்கினால்தான், நமக்கு அதற்கான விளக்கம் கிடைக்கும். பவித்ரோத்ஸவத்தின் நோக்கத்தையும், ஆனிமாதத்திற்கான பூஜை அது என்பதோடும், பொருத்திப் பார்க்கும்போதுதான் பெருஞ்சாந்தி என்ற சொல்லின் பொருள் நமக்கு விளங்குகிறது.

ஞானசம்பந்தப்பெருமான் ஆகமநெறியில் ஊறித்திளைத்ததன் காரணத்தால்தான் பவித்ராரோஹணம் என்ற உத்ஸவத்திற்கு பெருஞ்சாந்தி என்ற சொல்லைப் பயன்படுத்தியிருக்கிறார் என்பது நாமெல்லாம் எண்ணி எண்ணி மகிழத்தக்கதாக அமைந்திருக்கிறது.

சைவர்கள் தங்கள் வாழ்வின் முதற்பொருளாக முக்கியப்பொருளாக சிவபெருமானையே கொள்ள வேண்டும் என்பது விதி. எனவேதான் தீக்ஷைபெற்ற உடனேயே ஆசார்யர் சிஷ்யனை நோக்கி சில கட்டளைகளைப் பிறப்பிக்கிறார். அவை

1. உலகத்திற்குக் காரணமான இறைவனை எக்காரணம்கொண்டும் இகழக்கூடாது.
2. இறைவன் நூல்களாகிய வேதாகமங்களை எக்காரணம் கொண்டும் இகழக்கூடாது.
3. குருவையும் ஸாதகர்களையும் எக்காரணம்கொண்டும் இகழக்கூடாது.
4. குரு, ஸாதகர்கள், சிவலிங்கம் ஆகியவற்றின் நிழலைத் தாண்டக்கூடாது.
5. சிவபூஜை, அக்னிபூஜை, குருபூஜை ஆகியவற்றை உயிருள்ளவரைச் செய்யவேண்டும்.

என்பனவும் இன்னும் சிலவுமாம் .

தீக்ஷை பெற்றுக்கொண்ட சீடன் ஒவ்வொருநாளும் காலை எழுந்தவுடன் முதன்முதலாகச் செய்யவேண்டியது, சிவபெருமானை தியானிப்பதே ஆகும் என்கின்றன ஆகமங்கள். தீக்ஷை பெற்றுக் கொண்டவர்களுக்கான அன்றாடக் கடமைகளை ஆகமங்களின்வழியில் அமைத்துத்தந்த ஸ்ரீமத் அகோர சிவாசார்யர், தனது க்ரியா-க்ரம-த்யோதிகா என்ற நூலில், அன்றாடக் கடமைகளைச் சொல்லத் துவங்கும்போது,

**“ப்ராதஸ்ஸமயாத் பூர்வம் பஞ்சநாடிகாவச்சேதே ஸமுத்தாய, சுசிர் வாபி அசுசிர் வா யதாஸம்பவ சௌசயுக்த: ஹ்ருத்பத்மே த்வாதசாந்தே வா குருபதிஷ்டப்ரகாரேண சிவம் த்யாத்வா.”**

- பக்-5, நித்யவிதி, க்ரியாக்ரமத்யோதிகா

என்று கூறுகிறார். அதாவது காலையில் சூரியன் உதிப்பதற்கு இரண்டு மணி நேரங்களுக்கு முன்னெழுந்து, முடிந்தளவுத் தன்னைத் தூய்மை செய்துகொண்டு, இதயத்திலோ, த்வாதசாந்தத்திலோ, குருநாதர் சொன்ன வழியில் சிவபெருமானை த்யானிக்கவேண்டும் என்பது இதன் பொருள். இதன்மூலம் நம் வாழ்க்கையின் முதற்பொருள் பெருமானே என்பதை உணர்த்துகிறது நம் சமயம். இக்கருத்தையே முதலாக வைத்து, அதிலும் திருப்பள்ளியெழுச்சியின் முதற்பாடலாக அமைத்து நமக்கு உணர்த்துகிறார் நம் ஆசார்யப்பெருந்தகை ஸ்ரீமத் மணிவாசகப்பெருமான்,

**“போற்றி என் வாழ்முதல் ஆகிய பொருளே”** என்று.

இன்னும் ஓர் அற்புதமான செய்தி திருவாசகத்தின் திருப்பள்ளியெழுச்சியில் அமைந்திருக்கிறது. அதாவது, ஸமயதீக்ஷை பெற்றுக்கொள்ளும்போது, சீடனை யாகசாலையின் வெளியில் நிறுத்தி, சில ஸம்ஸ்காரங்களை அவனுக்குச் செய்து, அவனது கண்களை ஒரு துணியினால்

கட்டி, கைகளில் மலர்களைக் கொடுத்து, ஆசார்யர் அவனது கரம் பற்றி அவனை யாகசாலை எனும் சைவசமயத்திற்குள் அழைத்துச் செல்லவேண்டும்.

அத்தருணத்தில் யாகசாலையின் மையப்பகுதியில் அமைந்திருக்கும் வேதிகையில், அமைக்கப்பட்டிருக்கும் மண்டலத்தில் சிவபெருமானை எழுந்தருளச் செய்திருக்கிறார் ஆசார்யர். சீடனைக் கரம் பற்றி யாகசாலையை வலமாக வந்து, வேதிகையின் தென்புறத்தில் சீடனை நிறுத்தி, கண்களைத் திறந்து, பூஜை செய்யப்பட்ட மண்டலத்தில் மலர்களை இட்டு பெருமானைக் காண்பித்து, குழந்தாய் தேவர்களுக்கும் அரியவரான பெருமான் எங்கோ இல்லை. இங்கே தான் இருக்கிறார் என்று கூறுகிறார். அவ்விடத்தில் வரும் வாக்யம்.

**"ஹே புத்ரக, அபவர்க அர்ஹத்வ வர்ஜிதை: அமரை: அபி, அத்ருஷ்டம் பரமேச்வரம் நேத்ரே உந்மீல்ய பச்ய"** என்பதாகும்.

- பக். 250, தீக்ஷாவிதி, க்ரியா-க்ரம-த்யோதிகா

இதன்பொருள்:- குழந்தாய், அமரரும் அறியமுடியாத = காணமுடியாத பரமேச்வரன் இங்கே இருக்கிறார். கண்களைத் திறந்து பார் என்பதாகும். இக்கருத்தை அப்படியே அடியொட்டி அமைந்திருக்கும் பாடல் **அது பழச் சுவையென** எனத் தொடங்கும் பாடல்.

அப்பாடலுள் இறைவனைக் குறிக்கும் **அமரரும் அறியார்** என்ற சொற்றொடர், **அமரை: அபி அத்ருஷ்டம் பரமேச்வரம் = அமரர்களாலும் காணமுடியாத இறைவன்,** என்பதோடும், **இது அவன் திருவுரு இவன் அவன் எனவே** எனச் சுட்டிக்காண்பிக்கும் தொடர் **பரமேச்வரம் நேத்ரே உந்மீல்ய பச்ய = கண்களைத் திறந்து பார் இவர் தான் பரமேச்வரன்** என்று சுட்டிக்காண்பித்தலோடு பொருத்திப் பார்க்கும்போது, அருளாளர்கள் ஆகமங்களை எவ்வளவுதூரம் உய்த்து உணர்ந்திருக்கிறார்கள் என்பதை அறியமுடிகிறது.

இவையன்றிப் பலவிடங்களில் [13]தந்திரம் என்ற பெயராலும் ஆகமங்களைக் குறிப்பிட்டிருக்கிறார்கள் அருளாளர்பெருமக்கள்.

மேற்கூறிய சில கருத்துக்களோடு ஆகமங்களையும் அருளாளர்களின் அருள்வாக்கினையும் உற்றுநோக்கினால் **"அருளாளர்கள் வாக்குகள் ஆகமங்களைப் போற்றுவதோடு அமையமால் அவையே ஆகமவாக்குகள் தான்"** என்றும், இதைத்தான் பெருமான் **"எனதுரை தனதுரையாக"** என்று அருளியிருக்கிறார் என்றும் உணரமுடிகிறது.

**"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"**

[13] தந்திரம் ஆவது நீறு, மந்திரமும் தந்திரமும் ஆனார் தாமே, தந்திரம் அறியாத் தக்கன் வேள்வி